திருவாரூர் மாவட்டம் – சமத்துவபுர குடியிருப்புகளை கட்டியதற்காக திரு.சி.வரதராஜன் மற்றும் இதர இரண்டு ஒப்பந்தக்காரர்களுக்கு ரூ.5.535 லட்சத்தை வழங்கிட சிறப்பு இனமாகக் கருதி ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநருக்கு அனுமதி அளித்தல்

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.1) துறை

அரசாணை (1டி) எண்.220 நாள் : 08.04.2008

படிக்கப்பட்டவை

1) அரசாணை (நிலை) எண்.69. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 4.7.2006.
2) திரு. சி.வரதராஜன், தஞ்சாவூர் மாவட்டம் அவர்களின் தலைமைச் செயலருக்கு முகவரியிட்ட மனு.
3) திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நே.மு.க.3747/04/ ஏ2 நாள் 30.10.2007.
4) ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் கடிதம் 82393/03 /எஸ்.எஸ்.1, நாள் 20.12.2007.

ஆணை

பார்வை ஒன்றில் உள்ள அரசாணையில் தொகுப்பு வீடுகளை பழுதுபார்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.16.75 கோடி தொகையிலிருந்து ரூ.14.50 கோடி தொகையினை சமத்துவபுரங்களில் உள்ள சாலை, குடிநீர், தெருவிளக்கு ஆகிய வசதிகளை சீரமைக்கும் பணிகளை முதற்கட்டமாக மேற்கொள்ளவும், மீதமுள்ள நிதி இருப்பிற்கேற்ப சமத்துவபுர வீடுகளின் பழுதுக்குத் தகுந்தவாறு பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதியளித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. பார்வை நான்கிலுள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், நீடாமங்கலம் வட்டத்தில் ஆதனூர் கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்ட சமத்துவபுரம் வீடுகளுக்கு பயனாளிகள் பங்குத்தொகை, கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலம் கடன் பெற முடியாத நிலை உள்ளதால் ஒப்பந்தக்காரர்களுக்கு நாளது தேதிவரை மீதம் வழங்கப்பட வேண்டிய தொகை வழங்க முடியவில்லை என்றும், இந்நிலையில், மூன்று ஒப்பந்தக்காரர்களுக்கு மீதம் வழங்கப்பட வேண்டிய தொகையான ரூ.5,53,500/–ஐ சிறப்பு நிதியாக விடுவிக்குமாறு திருவாரூர் மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து அரசாணை (நிலை) எண்.69, ஊரக வளர்ச்சித் துறை நாள் 4.7.2006ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் பயன்படுத்தாது நிலுவையில் உள்ள தொகை பற்றிய விவரம் தெரிவிக்குமாறு அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், அதன்படி பின்வருமாறு சேமிப்புத் தொகை உள்ளது எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்:–

| மாவட்டம் | (ரூபாய் லட்சங்களில்) |
|---|---|
| 1. காஞ்சிபுரம் | 0.100 |
| 2. புதுக்கோட்டை | 0.120 |
| 3. இராமநாதபுரம் | 0.346 |
| 4. கரூர் | 0.587 |
| 5. திண்டுக்கல் | 18.060 |
| 6. மதுரை | 0.676 |
| **மொத்தம்** | **19.889** |

மேலும், மூன்று ஒப்பந்தக்காரர்களுக்கு, மீதம் வழங்கப்பட வேண்டிய தொகையான ரூ.5,53,500/–ஐ சமத்துவபுர குடியிருப்பு பராமரிப்பு பணிகளுக்காக திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படாது நிலுவையில் உள்ள தொகையிலிருந்து சிறப்பு நிகழ்வாக ஒதுக்கித் தருமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. அதன்படி, மேலே குறிப்பிட்ட ஆறு மாவட்டங்களில் சமத்துவபுர வீடுகளின் வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டு பயன்படுத்தாது நிலுவையில் உள்ள ரூ.19.889 லட்சத்தை வட்டித் தொகையுடன் அரசுக் கணக்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்/சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனே திரும்ப செலுத்த வேண்டும் என்றும், திருவாரூர் மாவட்டத்தில் சமத்துவபுர வீடுகள் கட்டியமைக்காக கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.5,53,500/–ஐ (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கிட சிறப்பு இனமாகக் கருதி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

| | ஒப்பந்தக்காரர்கள் (திருவாளர்கள்) | மீதம் வழங்கப்பட வேண்டிய தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | C. வரதராஜன் | 2.419 |
| 2. | K. ஜெயகுமார் | 2.815 |
| 3. | T. சேகர் | 0.301 |
| | **மொத்தம்** | **5.535** |

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2216 வீட்டு வசதி 03– ஊரக வீட்டு வசதி 800 ஏனைய செலவு – 800 – ஏனைய செலவு பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II. மாநிலத் திட்டம் JC பெரியார் நினைவு சமத்துவபுரம் உருவாக்குதல்–09. உதவித் தொகை 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.”
(து.தொ.கு 2216 03 800 JC 0933).

5. மேலே பத்தி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள பயன்படுத்தாது நிலுவையில் உள்ள தொகை ரூ.19.889 லட்சத்தை வட்டித் தொகையுடன் சேர்த்து கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும்.

“2515 00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 911 கழிக்கவும் – மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்–II மாநிலத் திட்டம் JA கழிக்கவும் – மிகையாகக் கொடுக்கப்பட்ட தொகையை வசூலித்தல்–1991 ஆம் ஆண்டிற்கு முன்னர் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளில் பழுதுபார்க்கும் பணிகளுக்கான திட்டம் 77. கழிக்கவும் – திருப்பி வசூலிப்பவை 03. ஏனைய வசூல்கள். ”
(து.தொ.கு.2515 00 911 JA 7730).

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான நிதியொதுக்கம் திருத்திய/ இறுதி திருத்த மதிப்பீடு 2008–09ல் ஒதுக்கீடு செய்யப்படும் திருத்திய/இறுதி திருத்த மதிப்பீடு 2008–

09ல் நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இச்செலவினத்திற்கான வரவு செலவுத் திட்டக் கருத்துருக்கள் திருத்திய/இறுதி திருத்த மதிப்பீடு 2008–09க்கான கருத்துருக்கள் அனுப்பும்போது சேர்த்து அனுப்பி வைத்திடுமாறும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.93/DS(APA) /08 நாள் 4.4.2008 ல் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 9 (ஒன்பது) ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்